செய்தி வெளியீடு எண்: 220 நாள்: 07.03.2019

## செய்தி வெளீயீடு

போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து போக்குவரத்துத்துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இயக்குநர் குழு கூட்டம் (Board Meeting) நேற்று (06.03.2019) மற்றும் இன்று (07.03.2019) ஆகிய தேதிகளில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை), அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (சென்னை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர் உள்ளிட்ட ஏழு போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள், செலவீனங்களை குறைத்து நிதி நிலையை மேம்படுத்துதல், பணியாளர்களின் பதவி உயர்வு, பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விரைந்து முடித்தல், பணிமனைகளை பழுது நிவர்த்தி செய்தல், பழைய பேருந்துகள் மற்றும் அலுவலக வாகனங்களை கழிவு செய்தல், அண்மையில் சட்டப்பேரவையில் போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்தறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துதல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய பேருந்துகளின் இயக்கம் மற்றும் வசூல் நிலவரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு கிராமப்புற மக்களின் போக்குவரத்துத் தேவைகளை ஈடு செய்கின்ற வகையில் கூடுதல் பேருந்துகளை இயக்குதல் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து விரிவான கலந்தாலோசிக்கப்பட்டன.

இறுதியாக, தலைமை வகித்த போக்குவரத்துத்துறை முதன்மை செயலாளர் தமது உரையில் ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நமது அனைத்து போக்குவரத்துக் கழகங்களையும் மேம்படுத்திட வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில், கடந்த 8 மாதத்தில் 603 கோடியே மதிப்பீட்டில் 2316 புதிய பேருந்துகள், போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகளில் குளிர்சாதன வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட தற்போதைய கால கட்டத்திற்கு தேவையான அதிநவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை நல்லமுறையில் பரமாரித்து வருவாயினைப் பெருக்கிட வேண்டுமாறு கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழல் நலனினை போற்றி பாதுகாக்கின்ற வகையில், தொலைநோக்குப் பார்வையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக மின்கலன் அல்லது மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகள் இயக்குவதற்கான விரிவான திட்டமானது C-40 (Clean Bus Declaration) என்கிற பன்னாட்டு அமைப்பின் மூலம் செயல்படுத்திட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன், 12,000 புதிய பி.எஸ்–VI தரத்திலான பேருந்துகளையும், 2,000 மின்சாரப் பேருந்துகளையும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகரங்களில் கூடிய விரைவில் மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. அதற்கு தேவையான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகிறது. எனவே இதுதொடர்பான பணிகளை திறம்பட செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நம்முடைய அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ 1.20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். குறிப்பாக, பொது மக்களின் சேவைகளில் ஈடுபட்டுள்ள நடத்துநர்கள், ஓட்டுநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் களைந்திட ஆவன செய்யுமாறு மேலாண் இயக்குநர்களை கேட்டுக் கொண்டார். அந்த வகையில் ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் பணியாளர்களின் குறை கேட்கின்ற நாளாக தேர்வு செய்து அந்த நாட்களில் தலைமையிடம் மற்றும் பணிமனைகளில் அவர்களுடைய கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை உடனுக்குடன் சரி செய்திடுமாறும் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் முழு அர்பணிப்புடன்தான் தரமான சேவையை பொது மக்களுக்கு வழங்கிட இயலும் என்பதை நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்’’.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**